**பண்டாரவல பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 யூன் 06 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூன் 05 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 07 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பண்டாரவல பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) சபைக்குக் கிடைக்கப் பெற்ற பட்டோலையின் பிரகாரம் 2012 சனவரி முதல் நவம்பர் வரையான காலத்திற்குக் கிடைக்க வேண்டிய காணி உரிமை மாற்றல் முத்திரைக் கட்டணம் ரூபா 7,752,355 தொகையும், 2012 சனவரி முதல் ஒக்தோபர் வரையான காலத்திற்குக் கிடைக்க வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணமான ரூபா 3,189,424 தொகையும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வருமானக் கடன்பட்டோரின் கீழ் கணக்கு வைக்கப்படாமையினால் மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் ஆண்டின் இறுதியிலுள்ள கடன்பட்டோர் மீதி என்பன ரூபா 10,941,779 படி குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டில் கிடைத்த காணி உரிமை மாற்றல் முத்திரைக் கட்டணம் ரூபா 5,978,425 தொகை மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கு வைக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமானத்தினால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டில் கிடைத்த நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 994,250 தொகை மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கு வைக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமானத்தினால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டு இதுவரையில் அமுல்படுத்தப்படாத நீர்ச் செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட செலவினம் ரூபா 550,000 தொகைக்காக மீளாய்வாண்டின் இறுதியில் கடன்கொடுத்தேரின் கீழ் நிதியேற்பாடு செய்யப்பட்டமையினால் மீளாய்வாண்டின் செலவினம் மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் கடன்கொடுத்தோர் மீதி என்பன ரூபா 550,000 படி அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 11,060,437 தொகையான நிலுவையாக இருந்த ஏனைய வருமான மீதி ரூபா 12,983,676 தொகையாக ரூபா 1,923,239 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 13,612,348 தொகையான செலவினக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 14,363,862 என ரூபா 751,514 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 29,133 தொகையான செலவு மீதி தொங்கல் கணக்கில் காணப்பட்டது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,537,972 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,412,220 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 189 | 295 | 288 |
| (ii) | வாடகை | 19 | 29 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 150 | 130 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 14,563 | 30,047 | 12,984 |

### 2.2.2 நீர்க்கட்டணம்

கல்வடுவத்த நீர் உத்தேசத்திட்டத்தின் கீழ் நீர் பெறும் பாவனையாளர்களிடமிருந்து 2011 ஆம் ஆண்டு தொடக்கம் நீர்க்கட்டணம் பட்டியலிடல் நிறுத்தப்பட்டிருந்ததுடன் 09 பாவனையாளர்களிடமிருந்து 2011 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 36,995 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் வரப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையில் சேவையாற்றி இடமாறிச் சென்ற மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற 05 ஊழியர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 45,663 தொகையான கடன் பணம்